நகராட்சி அலுவலகம்,
விக்கிரமசிங்கபுரம்.
நாள் : 21 .05.2022

**சாதரணக் கூட்டம்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மன்றத்தின் சாதாரண கூட்டம் எதிர்வரும் 2022ம் வருடம் மே மாத**ம் 24ம்** தேதி **செவ்வாய்கிழமை** காலை 10.30 மணிக்கு **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற **சாதரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**பொருள் எண் : 1**

சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் சுட்டிக்காட்டியுள்ளவாறு சொத்து வரி மற்றும் காலிமனை வரி சீராய்வு செய்ய வேண்டி இந்நகர்மன்றத்தில் தீர்மான எண் 24 நாள் 11.04.2022 ன் படி அனுமதிக்கப்ட்டுள்ளது. அதில் அனுமதிக்கப்பட்டுள்ள விவரப்படி, சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றரிக்கையில் தெரிவித்துள்ளவாறு பொது மக்களுக்கு தெரிவிக்கும்வண்ணம், பொது மக்கள் அதிககளவு படிக்கும் தினமலர் மற்றம் தினகரன் நாளிதழில் திருநெல்வேலி மாவட்டசெய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் மூலம் 14.04.2022 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அவ்வறிவிப்பின் சொத்து வரி மற்றும் காலிமனை வரி சீராய்வு செய்வது குறித்து ஆட்சேபனை ஏதுமிருப்பின் அதனை 30 தினங்களுக்குள் நகராட்சி அலுவலகத்திற்கு எழுத்து மூலம் தெரிவிக்க அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் 14.05.2022 வரை உள்ள காலங்களில் மேற்கண்ட சொத்து வரி மற்றும் காலிமனை வரி சீராய்வு செய்வது குறித்து யாதொரு ஆட்சபனையும் வரப்பெறவில்லை. எனவே மன்றத் தீர்மானம் எண் 24 நாள் 11.04.2022 ல் மன்ற தீர்மானம் நிறைவேற்றி நிர்ணயம் செய்யப்பட்ட அடிப்படை மதிப்புகளின் படி விக்கிரமசிங்கபும் நகராட்சி பகுதியில் 01.04.2022 முதல் சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

மேலும் மேற்கண்ட மன்றத் தீர்மானம் எண் 24 நாள் 11.04.2022 ல் நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து வரி மற்றும் காலிமனை வரிக்கான சீராய்வு விவரங்களை மாவட்ட அரசிதழில் வெளியிடவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**தீர்மான எண் : 36 / தீர்மான எண் 24 நாள் 11.04.2022 ல் அனுமதிக்கப்பட்டதின் படி 01.04.2022 முதல் சொத்து வரி மற்றும் காலிமனை வரி பொதுசீராய்வு மேற்கொள்ளவும், அரசிதழில் வெளியிடவும் மன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண் ஜி2/9907/2022 நாள் 25.03.2022 ன் படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள பாபநாசம் திருகோவிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் வாகனம் நிறுத்தம் அமைப்பதற்கு ,விக்கிரமசிங்கபுரம் வருவாய்கிராமம் பகுதி II புல எண் 905/4, 905/5 மற்றம் 903/2 தோப்பு புறம்போக்கு நிலத்தினை விக்கிரமசிங்கபுரம் நகராட்சி துறைக்க பயன்படுத்திக்கொள்ள முன் நுழைவு அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மூலம் தற்காலிகமாக சீர் செய்யப்பட்டு வாகனம் நிறுத்தம் அமைக்கப்பட்டுள்ளது. 06.04.2022 அன்று திருநெல்வேலி மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் நேரடி ஆய்வின் போது , எதிர்வரும் சித்திரை விசு திருவிழாவினை முன்னிட்டும், அன்றாடம் கோவிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயனிகளின் கூட்டம் அதிகளவு வருவதாலும், கோவில் அருகே ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தற்காலிக கழிப்பறை அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி 4 எண்ணம் தற்காலிக கழிப்பறை அமைக்கும் பணி மேற்கொள்ள இந்நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 37 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரை மற்றும் அம்ரூட் 2.0 திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் படி, நகர்புறங்களில் உள்ள குடியிருப்புகள் அனைத்திற்கும் குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதின் படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள 19377 குடியிருப்புகளில் ஏற்கனவே வழங்கப்பட்ட11889 குடிநீர் இணைப்புகள் போக மீதமுள்ள 7488 குடியிருப்புகளுக்கு முதற்கட்டமாக 2022 – 23 ம் ஆண்டில் 5661 வீட்டுக் குடிநீர் இணைப்பு வழங்க இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் ரூ.500.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டியும் மற்றும் பணியினை மேற்கொள்ள நிதிபெறும் பொருட்டு திட்ட கருத்துருவினை சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு சமர்பிக்க மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கருத்துரு சமர்ப்பித்தமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு

(ந.க.எண்1234/2022/இ1)

**தீர்மான எண் : 38 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 4**

சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் சுட்டிக்காட்டியுள்ளவாறு சொத்து வரி மற்றும் காலிமனை வரி சீராய்வு செய்ய வேண்டி இந்நகர்மன்றத்தில் தீர்மான எண் 23 நாள் 11.04.2022 ன் படி அனுமதிக்கப்ட்டுள்ளது. அதில் அனுமதிக்கப்பட்டுள்ள விவரப்படி, சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றரிக்கையில் தெரிவித்துள்ளவாறு பொது மக்களுக்கு தெரிவிக்கும் வன்னம், பொது மக்கள் அதிகளவு படிக்கும் நாளிதழில் அறிவிப்பு வெளியிட அறிவுறத்தப்பட்டுள்ளது. அதன் படி தினகரன் நாளிதழில் திருநெல்வேலி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் அவர்களின்வெளியீட்டு ஆணை எண் 85/2022 நாள் 13.04.2022 ன் படி வெளியிட்ட வகைக்கு, தினகரன் நாளிதழ் KAL Publication மூலம் வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.41277/– மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 39 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 5**

சொத்து வரி மற்றும் காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் சுட்டிக்காட்டியுள்ளவாறு சொத்து வரி மற்றும் காலிமனை வரி சீராய்வு செய்ய அறிவுறத்தப்பட்டுள்ளது. மேலும் சுற்றரிக்கையில் சொத்துக்களின் உரிமையாளர்களிடமிருந்து சொத்துவரி சுயமதிப்பீட்டு படிவம் பெறவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு தேவையாக சுயமதிப்பீட்டு படிவம் அச்சிட்டு பெற பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று திருச்சி TamilNadu Multipurpose Indco Serve நிறுவனம் மூலம் சுயமதிப்பீட்டு படிவம் கொள்முதல் செய்த வகைக்குக்கும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 40 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 6**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண் ஜி2/9907/2022 நாள் 26.03.2022 ன் படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு வாகன காப்பகம் மற்றும் பேரூந்து நிலையம் அமைத்துக்கொள்ள முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் சித்திரை விசு திருவிழாவினை முன்னிட்டு, பாபநாசம் கோவிலுக்கு வரும் பக்த்தர்கள் மற்றும் சுற்றுலா பயனிகளின் கூட்டம் அதிகளவு இருக்கும் என்பதால், பாபநாசம் கோவில் முன்பு போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு

பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயனிகளின் வாகனங்களை மேற்கண்ட வாகனக் காப்பகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கு ஏதுவாக, மேற்கண்ட இடத்தினை சமன் செய்து சீர் செய்ய மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களால் **06.04.2022**அன்று மேற்கொள்ளப்பட்ட நேரடி ஆய்வில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி மேற்கண்ட புல எண் **905/5, 905/4** மற்றும் **903/2** தோப்பு புறம்போக்கு நிலத்தினை சமன் செய்யும் பொருட்டு, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மூலம் ஜேசிபி இயந்திரம் கொண்டு சமன் செய்யும் பணி மேற்கொள்ளவும், மற்றும் அய்யனார்குளம் பகுதி கூவாரியில் இருந்து சரள் கொண்டு இடத்தினை சமன் செய்ய வேண்டியும் பணிகள் மேற்கொள்ளவாகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட வேண்டி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 41 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்:7**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் **15 வது நிதிக்குழு மான்யம் 2020-21UNTIED** கீழ், கீழ் கண்ட பணிகள் செய்து முடிப்பதற்கு **23.03.2022** ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் அதிகத்தில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருமதி. எஸ்.சாந்தசீலா, ஒப்பந்தகாரர், பாளையங்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை தமிழ்நாடு நகராட்சிகளின் பொறியியல் வழிமுறைகளின்படி மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட **5** சதவிகிதத்திற்குள் இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் பரிசீலனை செய்து அங்கீகரிக்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பழைய வார்டு எண் 3 மீனாட்சிபுரம் பகுதி பூந்தோட்டம் தெருவில் பாலம் (Chainage 541.60m) அமைத்தல் (மதிப்பீடு ரூ **21.00** இலட்சம் ) | திருமதி. எஸ்.சாந்தசீலா, ஒப்பந்தகாரர், பாளையங்கோட்டை | **4.90** % மதிப்பீட்டை விட அதிகம் |
| | | திருமதி. எஸ். பொன்மலர், ஒப்பந்தகாரர், பாளையங்கோட்டை | **5.1** % மதிப்பீட்டை விட அதிகம் |

(ந.க.எண்:3270/2020/இ1) **தீர்மான எண் : 42 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 8**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொதுநிதியின் கீழ், கீழ் கண்ட பணிகள் செய்து முடிப்பதற்கு **19.04.2022** ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள M/s. ShaChaganlal Jayanthilal, ஒப்பந்தகாரர், திருநெல்வேலி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு

| வ எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு உட்பட்ட 21 வார்டு பகுதிகளில் உள்ள 40வாட்ஸ் குழல் விளக்குகள் விளக்குகள் 2022–23 ம் ஆண்டிற்கு தெருவிளக்கு உதிரி சாமான்கள் சப்ளை செய்யும் பணி (மதிப்பீடு ரூ **9.90** இலட்சம் ) | M/s. ShaChaganlal Jayanthilal திருநெல்வேலி | **0.09**% மதிப்பீட்டை விட குறைவு |
| | | M/s. Malini Lighting & Co., திருநெல்வேலி | **1.18**% மதிப்பீட்டை விட அதிகம் |

(ந.க.எண்:625/2020/இ1) **தீர்மான எண் : 43 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்:9**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொதுநிதியின் கீழ், கீழ் கண்ட பணிகள் செய்து முடிப்பதற்கு **19.04.2022** ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள M/s. ShaChaganlal Jayanthilal, ஒப்பந்தகாரர், திருநெல்வேலி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு

| வ எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு உட்பட்ட 21 வார்டு பகுதிகளில் உள்ள T5 –(4X24) விளக்குகள் 2022–23 ம் ஆண்டிற்கு தெருவிளக்கு உதிரி சாமான்கள் சப்ளை செய்யும் பணி (மதிப்பீடு ரூ 9.90 இலட்சம் ) | M/s. ShaChaganlal Jayanthilal திருநெல்வேலி | 0.26% மதிப்பீட்டை விட குறைவு |
| | | M/s. Malini Lighting & Co., திருநெல்வேலி | 0.60% மதிப்பீட்டை விட அதிகம் |

(ந.க.எண்:625/2020/இ1)

**தீர்மான எண் : 44 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 10**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் குடிநீர் திட்டநிதியின் கீழ், கீழ் கண்ட பணிகள் செய்து முடிப்பதற்கு 19.04.2022 ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள M/s. Excellent Chloro System, ஒப்பந்தகாரர், சங்கரன்கோவில் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு

| வ எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி பொதிகையடி துாய நீரேற்று நிலையம், கொட்டாரம் மேல் நிலை நீர்தேக்க தொட்டி, ஒட்டன்குளம் மற்றும் வம்பளந்தான் பாறை சம்பில் உள்ள Liquid Chlorination Plantக்கு 2022–23 ஆம் ஆண்டிற்கு Liquid Chlorination சப்ளை செய்யும் பணி (மதிப்பீடு ரூ 9.99 இலட்சம் ) | M/s. Excellent Chloro system, Sankarankovil | 0.68% மதிப்பீட்டை விட குறைவு |
| | | M/s. Shri Sathya dyes & Chemicals ஆன்டிப்பட்டடி | 2.72% மதிப்பீட்டை விட அதிகம் |

(ந.க.எண்:625/2020/இ1) **தீர்மான எண் : 45 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 11**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் குடிநீர் திட்டநிதியின் கீழ், கீழ் கண்ட பணிகள் செய்து முடிப்பதற்கு 19.04.2022 ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள R. செல்வின்துரை, ஒப்பந்தகாரர், கருவந்தா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு

| வ எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் பம்பிங்மெயின் குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளான கசிவுகள், உடைப்புகளை 2022–23 ஆண்டில் பொது பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு (மதிப்பீடு ரூ 9.30 இலட்சம் ) | திரு. R. செல்வின்துரை ஒப்பந்தக்காரர் கருவந்தா | 0.54% மதிப்பீட்டை விட குறைவு |
| | | திரு. ஜெயபிரகாஷ் ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 1.02% மதிப்பீட்டை விட அதிகம் |

(ந.க.எண்:625/2020/இ1) **தீர்மான எண் : 46 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 12**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் குடிநீர் திட்டநிதியின் கீழ், கீழ் கண்ட பணிகள் செய்து முடிப்பதற்கு 19.04.2022 ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள Sri Murugan Electriclas, ஒப்பந்தகாரர், கல்லிடைக்குறிச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு

| வ எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு உட்பட்ட 21 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின்விசை தொட்டிகள் மின்மோட்டார்கள் மற்றும் நகராட்சி கழிப்பறையில் இயக்கப்படும் மின்மோட்டார்களை 2022–23 ஆண்டில் பொது பராமரிப்பு பணி (மதிப்பீடு ரூ 6.50 இலட்சம் ) | Sri Murugan Electriclas ஒப்பந்தக்காரர் கல்லிடைக்குறிச்சி | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |
| | | திரு. ஜெயபிரகாஷ் ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 1.02% மதிப்பீட்டை விட அதிகம் |

(ந.க.எண்:625/2020/இ1) **தீர்மான எண் : 47 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 13**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள பேரூந்து நிறுத்த பயணிகள் நிழற்குடை பராமரிப்பின்றியும், சுவர்கள் முழுவதும் நோட்டீஸ் ஒட்டப்பட்டும் மிகவும் பொழிவிழந்து காணப்படுகிறது. விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பாபநாசம் மெயின்ரோடு வழியாக இந்நகர்பகுதியில் அமைந்துள்ள சுற்றலா தளங்களக்கு வெளியூரில் இருந்து பயணிகள் அதிகளவு வந்து செல்வதால் மேற்படி பொழிவிழந்த நிலையில் உள்ள பயணிகள் நிழற்குடைகளை, அழகுப்படுத்த வேண்டி, நிழற்குடைகள் முழுவதிலும் சீரமைத்தல் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு மேலும் இப்பணியினை பங்குதாரர்கள் கண்டறிந்து அவர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளவும். பங்குதாரர்களின் பெயரினை எழுதிக்கொள்ளவும் அனுமதிக்க வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு.

**தீர்மான எண் : 48 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 14**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிகுட்பட்ட 19 வது வார்டு பகுதியில், மூலதனமான்ய நிதி மற்றும் இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் சுகாதரா பணியாளர்கள் குடியிருப்பு கட்டிடம் 3 பிளாக் 18 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. குடியிருப்புகள் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத் தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது. மேற்கண்ட குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வேண்டி மின்சாரி வரியத்தில் விண்ணப்பம் செய்ததின் அடிப்படையில் புதிய மின் இணைப்பு பெறும் வகைக்காக, தமிழ்நாடு மின்சார வரியத்திடமிருந்து கேட்பு தொகை ரூ. 44506 / – மட்டும் செலுத்த கோரப்பட்டுள்ளது. குடியிருப்புகள் உடன் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என்பதன் அடிப்படையிலும், மின் இணைப்பு அத்தியாவசியம் என்பதனாலும் மேற்கண்ட கேட்புத்தொகை ரூ. 44506/– மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 49 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 15**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண் ப5/35232/21 நாள் 11.03.2022 ல் சிறப்பு திட்டத் செயலாக்கத்துறை நரிகுறவர், பழங்குடியினர் மற்றும் இதர விளிம்பு நிலை மக்கள் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி கள ஆய்வு தொடர் நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டு, இணைத்து வரப்பெற்ற மனுக்களில் உள்ள குறைகளை உடன் நிவர்த்தி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளதின் படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி சின்னமைலார் பகுதியில் 8 எண்ணம் தெருவிளக்கு மற்றும் 2 எண்ணம் சுவிட்ச் பாக்ஸ் அமைக்க வேண்டி, இந்நகராட்சி மூலம் விண்ணப்பிக்கப்பட்டது. மேற்கண்ட புதிய தெருவிளக்குகள் அமைக்க மின்வாரியத்தில் இருந்து ரூ.130270/– மட்டும் செலுத்த கேட்டு கேட்பு வரப்பெற்றுள்ளது. கேட்புத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு,

**தீர்மான எண் : 50 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 16**

மாண்புமிகு தமிழக முதல்மைச்சரின் சிறப்பு திட்டமான ''மீண்டும் மஞ்சள் பை'' நெகிழி பயன்பாட்டை தவிர்த்து மஞ்சள் பை முன்னெடுப்பை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்அடிப்படையில் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகளில் மேற்கண்ட பொருள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மல்டி கலர் நோட்டீஸ்கள் மற்றும் ஸ்டிக்கர்கள் கொள்முதல்

செய்யவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 5.64 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 51 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 17**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுசுகாதரபிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண் TN 76 AX 1658 ல் உள்ள பேட்டரி பழுதடைந்த நிலையில், வாகனத்தினை பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. பொது சுகாதாரம் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்திற் கொண்டு, மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதடைந்த பேட்டரினை மாற்றி புதிய பேட்டரி பொருத்தும் பணி மேற்கொள்ள நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கும், அதற்கான பட்டியல் தொகை ரூ.3600/– மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 52 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 18**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுசுகாதரபிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண் TN 76 AX 1614 க்கு தகுதி சான்று முடிவடைவதால், தகுதி சான்று பெற வேண்டி, பொது பராமரிப்பு பணிமேற்கொள்ள அவசியமாகிறது. அதன் அடிப்படையில் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பொது பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்க்கண்ட வாறு

| **வாகன எண்** | **விநாயாக மோட்டார் ஓர்க்ஸ்** | **சுந்தரம் மோட்டார்ஸ்** | **ஜெனரல் மோட்டார்ஸ்** |
|---|---|---|---|
| TN 76 AX 1614 பொது பராமரிப்பு பணிமேற்கொள்ள | **ரூ.81768/–** | **ரூ.85184/–** | **ரூ.87532/–** |

குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள விநாயாகர் மோட்டார் ஓர்க்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை அங்கீகரித்து நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 53 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 19**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் தாமரபரணி நதி துாய்மைப்படுத்துதல் தொடர்பாக 02.04.2022 அன்று நடைபெற்ற முன்னோடி ஆய்வு கூட்ட நடவடிக்கைள் அதன் தொடர்புடைய கடிதங்கள் மற்றும் நேரடி அறிவுரைகளின், துாய பொருநை நெல்லைக்கு பெருமை என்ற தலைப்பில் , விழிப்புணர்வு மற்றும் கலை நிகழ்ச்சிகள் மற்றும் மாணவர்களுக்கான போட்டிகள் 23.04.2022 அன்று பாபாநாசம் தாமிரபரணி ஆற்றங்கரை பகுதியில் நடைபெறவுள்ளதால், கரையோர பகுதிகளை சுத்தம் செய்ய ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.அப்பணிகளுக்கு தேவையான கீழ்க்கண்ட விவரப்படியான தளவாட பொருட்கள், கலைநிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகளில் கலந்துக்கொள்ளும் மாணவ மாணவிகளுக்கு பரிசு பொருட்கள் மற்றும் இதர செலவினங்கள் இந்நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட்டுள்ள கீழ்க்கண்ட விவரப்படியான செலவினங்களை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு

| **வ.எண்** | **பொருட்களின் விவரம்** | **செலவினத் தொகை** |
|---|---|---|
| 1 | பெயின்டிங் ஓர்க்ஸ் (விழிப்புணர்வு அறிவிப்புகள்) | ரூ. 4500 / – |
| 2 | மாணவர்களுக்கு வழங்க திருக்குறள் புத்தகம் வாங்கிய வகைக்கு | ரூ. 2000/– |
| 3 | துாய பொருநை நெல்லைக்கு பெருமை பேனர் மற்றும் அறிவிப்பு தயார் செய்தல் | ரூ. 14950/– |
| 4 | தண்ணீர் கேன் | ரூ. 3070/– |

**தீர்மான எண் : 54 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 20**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 1 முதல் 21 வார்டு நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் படி கீழ்க்கண்ட விவரப்படியான பணிகளை, பணியின் அவசியம் மற்றும் அவசரத்தின் படி, திட்ட ஒதுக்கீடு மற்றும் உரிய பொது நிதி திட்ட ஒதுக்கீட்டின் படியும் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்தல் தொடர்பாக மன்றத்தின் பரிசீலனைக்கு

| வார்டு எண் | வேலையின் விவரம் |
|---|---|
| 1 | வடமலைசமுத்திரம் பகுதியில் அமைந்துள்ள ஆர்.சி.சர்ச் மற்றும் சர்ச் வளாகத்தில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடத்திற்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க வேண்டி |
| 2 | அய்யனார்குளம் அய்யா கோவில் முன்புள்ள வால்வு தொட்டி 2 எண்ணத்திற்கு மூடி இல்லாததால், புதிய காங்கீரிட் மூடி அமைத்து தர கேட்டல் |
| 3 | மேலகாந்தி நகர் பகுதிகளில் மழைநீர் வடிகால் கால்வாய் சரியாக இல்லாததால், அதனை உடனே சரி சய்து தர கேட்டல்<br>மேலகாந்திநகர் தெரு வழியாக இருதயகுளம் கெபி ஆலயம் மற்றும் அமலி பெண்கள் மேல்நிலைப்பள்ளி விடுதிக்கு செல்லும் பாதையில் வேக தடை அமைத்து தர கேட்டல்<br>மேலகாந்தி நகர் பகுதியில் புதியதாக மின் விளக்கு அமைத்து தர கேட்டல்<br>அன்பு சிதம்பரம் திருமணமண்டபத்திற்கு எதிரே உள்ள புளியமர அபயகரமான நிலையில் உள்ளதால் அதனை அப்புறபடுத்தி தருமாறு கேட்டல் |
| 5 | காந்திபுரம் தெருவில் இயங்கி வரும் அங்கன்வாடி மைய எண் 33625020115 வாடகை கட்டிடத்தில் உள்ளதாலும், போதிய அடிப்படை வசதிகள் இல்லையென்பதாலும், புதிய அங்கன்வாடி மையம் கட்டித் தர கேட்டல் |
| 5 | பழைய ஆபீஸ் தெருவில் பேவர் பிளாக் சாலை,<br>இஎஸ்ஐ ஆபீ ஸ் தெருவில் கழிவு நீர் ஓடையுடன் கூடிய பேவர் பிளாக் சாலை,<br>தங்கம்மன் கோவில் வடக்குத் தெரு மற்றும் தங்கம்மன் கோவில் தெரு பகுதியில் பேவர் பிளாக் சாலை,<br>கம்பளத்தார் ஓடை நடுத்தெருவில் கழிவு நீர் ஓடையுடன் கூடிய பேவர் பிளாக் சாலை<br>காந்திபுரம் துப்புரவு பணியாளர் காலனியில் விடுப்பட்டுள்ள பகுதியில் கழிவு நீர் ஓடை மற்றும் சாலை அமைத்தல்<br>காந்திபுரம் அய்யா கோவில் தெருவில் கழிவு நீர் ஓடை அமைத்து, அய்யா கோவில் முன்புள்ள பள்ளதை சரிசெய்தல்<br>காந்திபுரம் அருந்ததியார் கோவில் பகுதியில் விடுப்பட்டுள்ளகழிவு நீர் ஓடை சரிசெய்து தர கேட்டல்<br>காந்திபுரம் விஸ்வகர்மா தெரு மற்றும் மருத்துவர் காலனி பகுதியில் சாலை மற்றும் கழிவு நீர் ஓடை அமைத்து தர கேட்டல் |
| 6 | வம்பளந்தான் பாறை தெரு, யாதவர் சமுதாய கோவில் முன்பு , மேட்டுத் தங்கம்மன் கோவில் முதல் தெரு ஆகிய பகுதிகளில் புதிய சின்டெக்ஸ் தொட்டி அமைத்து கேட்டல்<br>6 வது வார்டு மேட்டுத் தங்கம்மன் கோவில் தெருவிற்கு புதியதாக 2 இஞ்ச் பகிர்மான குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்து தர கேட்டல்<br>மேட்டுத் தங்கம்மன் கோவில் முதல் தெரு பகுதியில் உள்ள சிமெண்ட் சாலை அமைத்து 10 வருடங்கள் கடந்த நிலையில் புதிய சாலைஅமைத்து தர கேட்டல்<br>மேட்டுத் தங்கம்மன் கோவில் ரேசன் கடை செல்லும் பகுதியில் உள்ள தார் சாலை அமைத்து 10 வருடங்கள் கடந்த நிலையில் புதிய சாலைஅமைத்து தர கேட்டல்<br>பிள்ளையார் கோவில் தெரு, யாதவர் சமுதாய கோவில் முன்பு சிமெண்ட் சாலை அமைத்து 10 வருடங்கள் கடந்த நிலையில் புதிய சாலைஅமைத்து தர கேட்டல்<br>சலவை தொழிலாளர் காலனி முதல் தெரு குறவர் வாழும் இடத்தில் மண் சாலையாக உள்ளதை புதிய சாலை அமைத்து கேட்டல் |

| | |
|---|---|
| | சலவை தொழிலாளர் காலனி பகுதி வடபுறம் உள்ள மண் சாலையினை புதிய சாலை அமைத்து கேட்டல்<br>சலவை தொழிலாளர் காலனி கீழத் தெரு பகுதியில் உள்ள மண் சாலையினை புதிய சாலை அமைத்து கேட்டல்<br>சலவை தொழிலாளர் காலனி பகுதியில் பணிக்கர் குறவர்கள் வாழும் பகுதியில் புதிய சமுதாய நலக்கூடம் அமைத்து கேட்டல் |
| 7 | சங்கரபாண்டியபுரம் வடபகுதியில் தண்ணீர் பிரச்சினை உள்ளதால், அப்பகுதி வடக்குவாச் செல்வி கோவில் முன்பு புதிய குடிநீர் மேல் நிலை நீர்தேக்க தொட்டி அமைத்து தர கேட்டல்<br>கோட்டைவிளைப்பட்டி மெயின்ரோடு, கருத்தையாபுரம் அருகில் உள்ள முஸ்லிம்களுக்கான மையவாடியில் மின் கோபுரம் அமைத்து விளக்கு வசதி செய்து தர கேட்டல்<br>வளையர்மடம் தெற்குத் தெரு மற்றும் வடக்கு தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைத்து தர கேட்டல்<br>சுந்தரபுரம் சுனையம்மன் கோவில் முன்பு வாறுகால் பழைய பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் அமைத்து தர கேட்டல்<br>சத்திரம் மேலத்தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்து கேட்டல் |
| 8 | வடக்குத் தெருவில் உள்ள சிதிலமடைந்த சாலையினை சரி செய்து தர கேட்டல்<br>அம்மன் கோவில் வடக்குத் தெரு, கீழத் தெரு, மேலத்தெரு, மணி நகரம் கிறிஸ்துவ ஆலையம் வடக்குத் தெரு, நடுத் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சாலையினை சரி செய்து தர கேட்டல்<br>பசுவை வடக்குத் தெரு பகுதியில் நடு ரோடு வாறுகால் சிதிலமைடைந்து கழிவு நீர் தேங்கியுள்ளதால், பொது சுகாதாரகேடு ஏற்படுகிறது. எனவே அதனை உடன் சரி செய்து தரகேட்டல்<br>அம்மன் கோவில் முதல் வடக்கு தெரு வரை கீழ் பகுதி,<br>மணி நகரம் வடக்குத் தெரு, தெற்குத் தெரு, நடுத்தெரு ஆகிய பகுதிகளில் சாலைகள் அமைத்து 10 வருடங்கள் ஆனதால் புதிய சாலை அமைத்து தர கேட்டல்<br>மேலத் தெரு, வடக்குத் தெரு பகுதியில் உள்ள கால்வாய்கள் பயன்பாடு இன்றி உள்ளதை சரி செய்து தர கேட்டல்<br>வார்டு 8 பகுதியில் உள்ள குளத்து நீர் செல்லும் கால்வாயினை துார்வாரி, தளம் அமைத்து தர கேட்டல் |
| 10 | அனவன் குடியிருப்பு பகுதியில் தண்ணீர் பற்றாகுறை உள்ளதால், அப்பகுதியில் புதிய மேல்நிலை நீர் தேக்க தொட்டி அமைத்து, குடிநீர் பிரச்சினையை சரி செய்து கேட்டல்<br>அனவன் குடியிருப்பு பகுதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி முன் பகுதியில் வாறுகால் அமைத்து கேட்டல்<br>அனவன் குடியிருப்பு பகுதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி முன் வேகத் தடை அமைத்து கேட்டல்<br>அனவன் குடியிருப்பு பகுதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் உள்ள ஸ்மார்ட் வகுப்பிற்கு செல்ல புதிய நுழைவாயில் அமைத்துதர கேட்டல்<br>அனவன் குடியிருப்பு பகுதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் உள்ள ஸ்மார்ட் வகுப்பு வளாகம் சுற்றி சுற்றுசுவர் அமைத்து கேட்டல்<br>அனவன் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் செந்தில்குமார் என்பவருக்கு நகராட்சி மூலம் இலவச கழிப்பிடம் அமைத்து தர கேட்டல்<br>அனவன்குடியிருப்பு பகுதி பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள வாய்கால் பாலத்தை சீரமைத்து புதிய படித்துறை அமைத்து கேட்டல்<br>அனவன்குடியிருப்பு பகுதி அங்கன்வாடி தெருவில் வாறுகால் வசதி செய்து தர கேட்டல்<br>அனவன்குடியிருப்பு நியூ காலணி பகுதியில் இருபுறமும் தார் சாலை அமைத்து தர கேட்டல்<br>டாணா காளிபார்விளை பகுதியில் உள்ள கதவு எண் 30 இ வீட்டின் முன்பு அமைந்துள்ள பாதுகாப்பற்ற மின் கம்பதை மாற்றி அமைத்து தர கேட்டல்<br>அனவன்குடியிருப்பு நியூ காலணி பகுதிக்கு புதிய குடிநீர் பகிர்மானகுழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்து தர கேட்டல் |
| 11 | ஏரிகல்பாறை நடுத்தெருவில் உள்ள சின்டெக்ஸ் தொட்டி மோட்டார் ரூம் கதவு மற்றும் சுவர் |

| | |
|---|---|
| | சிதிலமடைந்துள்ளதால் அதனை சரி செய்து தரகேட்டல்<br>மேட்டுப்பாளையம் நடுத் தெருவில் உள்ள சின்டெக்ஸ் தொட்டி பழுதடைந்து பயன்பாட்டில் இல்லா நிலையில் உள்ளதால் , அதனை அகற்றி புதிய சின்டெக்ஸ் தொட்டி அமைத்து தர கேட்டல்<br>வாட்ச் மேன் வடக்குத் தெருவில் உள்ள கழிவு நீர் ஒடையின் ஒரு பகுதி உடைந்து சரிந்து சிதிலமடைந்துள்ளதால் , அதனை உடன் சரி செய்து தர கேட்டல்<br>எரிகல் பாறை நடுத் தெருவில் உள்ள குடிநீர் திறக்கும் வால்வு தொட்டியில் கழிவு நீர் தேங்குவதுடன், மழை காலங்களில் மழைநீரும் தேங்கி குடிநீரில் கலப்பதால், வால்வு தொட்டியினை சரி செய்து மூடி அமைத்து தர கேட்டல் |
| 13 | 13 வது வார்டு  தாமிரபரணி நகர் பகுதியில் உள்ள அனைத்து சமுதாய நலக்கூடத்தில் அடிப்படை வசதிகளான மின் விளக்கு, மின் விசிறி, குடிநீர் குழாய், கழிப்பறை,  கட்டிடத்தின் மேல்கூரையில் மழை நீர் தேங்காமல் சரி செய்தல் போன்ற வசதிகள் செய்து தர கேட்டல் |
| 14 | கொட்டாரம் பகுதியில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் ரேசன் கடைக்கு புதிய கட்டிடம் கட்டி தர கேட்டல்<br>மேலக்கொட்டாரம் பகுதியில் புதிய அங்கன்வாடி அமைத்து தர கேட்டல்<br>கீழக்கொட்டாரம்  மயான சாலையில் உள்ள மின் கம்பம் எண் SSD 32  போக்குவரத்திற்கு இடையூராக உள்ளதால் அதனை அகற்றி இடம் மாற்றம் செய்து தர கேட்டல்<br>மேலக்கொட்டாரம் மெயின்ரோடு ஓடை தெருவில் வசிக்கும்  விவசாயிகள் விவசாய பொருட்கள் கொண்டு செல்லும் பாதை சிதிலமடைந்துள்ளதால் ,இப்பாதையினை சரி செய்து தர கேட்டல்<br>மேலக்கொட்டாரம் பேச்சி அம்மன் கோவில் பின்புறம் மயானம் செல்லும் வழியில் உள்ள சாலையில் வாறுகால் அமைத்தல்  மற்றும் படித்துறை கட்டி தர கேட்டல்<br>மேலக்கொட்டாரம் வடக்குத் தெருவில் போடப்பட்டுள்ள வாறுகாலை  புதியதாக கட்டி தர கேட்டல்<br>கீழக்கொட்டாரம் சுவிசேசபுரம் தெரு நாராயண தெரு காலணியில் பேவர் பிளாக் சாலை அமைத்து கால்வாய் அமைத்து கேட்டல்<br>கொட்டாரம் பகுதியில் அமையப்பெற்றுள்ள 6 சின்டெக்ஸ் தொட்டியில் 5 எண்ணம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அதனை உடன் சரிசெய்து தர கேட்டல்<br>சுவிசேசபுரம் தெருவில் அமைக்கப்பட்டுள்ள 2 இஞ்ச் குடிநீர் பகிர்மான குழாயினை மாற்றி 4 இஞ்ச் குடிநீர் குழாய் அமைத்து தர கேட்டல் |
| 16 | மேற்குமுப்பிடாதியம்மன் கோவில் கீழ்பக்கம் உள்ள வாறுகால் சரி செய்து தர கேட்டல்<br>மேலரதவீதி யில் உள்ள சின்டெக்ஸ் தொட்டி சரி செய்து தர கேட்டல்<br>ஓட்டன்குளம் பகுதியில் புதிய மின் கம்பம் அமைத்து தெருவிளக்கு வசதி செய்து தர கேட்டல்<br>ஓட்டன்குளம் பகுதியில் புதிய ரேஷன் கடை அமைத்து தர கேட்டல் |
| 19 | பன்னிமாடசாமி கோவில் தெருவில் அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலை சிதிலமடைந்துள்ளதை சரி செய்தல் மற்றும் வாறுகால் மேல் அமைக்கப்பட்டுள்ள கான்கீரிட் பழுதடைந்துள்ளதை சர செய்து தர கேட்டல்<br>இராமலிங்கபுரம் மெயின்ரோட்டில் காமராஜர் வாசக சாலை முன்புள்ள சிறிய பாலம் பழுதடைந்துள்ளதை சரி செய்து தர கேட்டல்<br>சாலைதெரு மெயின்ரோடு இல்லத்து பிள்ளைமார் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட முப்பிடாதியம்மன் கோவில் முன்புள்ள சிமெண்ட் தளம் சேதமடைந்துள்ளதால் அதனை உடன் சரி செய்து தர கேட்டல்<br>மெயின்ரோட்டில் செயல் படும் மதுபான கடை எதிரே உள்ள தெருவில் துாய்மை நடவடிக்கை மேற்கொள்ள கேட்டல் |
| 21 | அம்பலவானபுரம் மாரியம்மன் கோவில் தென்புறம் உள்ள தெருவில் சிமெண்ட் சாலையுடன் கூடிய வாறுகால் அமைத்தல்<br>அன்பு சிதம்பரம் மண்டபம் பின்புறம் உள்ள தெருவில் கழிவுநீரோடை அமைத்து தர கேட்டல்<br>நாராயணசுவாமி கோவில் தெருவில் பாலத்திற்கு மேற்கே உள்ள சாலையில் சிமெண்ட சாலை அமைத்து தர கேட்டல்<br>அம்பலவாணபுரம் நடுத்தெரு பகுதியில் உள்ள கழிவுநீரோடையை சரி செய்து தர கேட்டல்<br>ஞாணியர்தோப்பு கீழ்பகுதியில் கழிவு நீரோடையும் , பேவர் பிளாக் சாலையும் அமைத்து கேட்டல்<br>அம்பலவானபுரம் மேலத்தெருவில் PLWA பள்ளி முன்பு கழிவுநீர் பைப் உடைந்து பள்ளி வாசல் முன் செல்வதால் அதனை சரி செய்து தர கேட்டல் |

| | |
|---|---|
| | அம்பலவாணபுரம் தெற்கு தெருவில் கீழ் பகுதி மற்றும் மேல் பகுதி வாய்கால் தடுப்பு சுவர் உடைந்துள்ளதால் அதனை சரி செய்து தர கேட்டல்<br>வார்டு எண் 21 பகுதியில் 5 எண்ணம் மின்கம்பத்தில் புதிய தெருவிளக்கு அமைத்து தர கேட்டல் |

**தீர்மான எண் : 55 / நகர்மன்ற உறுபினர்களின் கோரிக்கைகள், முன்னுரிமை அடிப்படையில் , நிதிநிலமையினை கருத்திற்கொண்டு, திட்ட நிதி ஒதுக்கீட்டின்படி பணிகளை தேர்வு செய்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 21**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொது நிதியின் கீழ், கீழ் கண்ட பணிகள் செய்து முடிப்பதற்கு 17.05.2022 ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள M/S. Janani Enterprises, Coimbotore நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு

| வ எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 12 பாபநாசம் திருகோவில் அருகே அமைப்பட்டுள்ள வாகன காப்பகத்தில் தற்காலிக தற்காலிக கழிப்பறை அமைத்தல் (மதிப்பீடு ரூ 2.50இலட்சம் ) | M/S. Janani Enterprises, Coimbotore | 0.0% மதிப்பீட்டு விலை விகிதம் |
| | | M/S. Sathish Enterprises, Coimbotore | 19.9% மதிப்பீட்டை விட அதிகம் |

(ந.க.எண்:2480/2020/இ1) **தீர்மான எண் : 56 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 22**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொது சுகாதாரபிரிவுக்கு தேவையான தளவாட சாமன்கள், பீளிச்சிங்பவுடர் மற்றும் இதர பொருட்கள் கொள்முதல் செய்ய நகர்மன்ற தீர்மான எண் 30 நாள் 11.04.2022ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது திருவிழா மற்றும் கோவில் கொடைகள் நடைபெற்று வருவதாலும், இந்நகராட்சியில் பீளிச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்பு தூள் இருப்பில் இல்லை என நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்கள் அறிக்கை செய்துள்ளதின் படி, பொது சுகாதாரம் அவசியம் கருதி பீளிச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்பு தூள் கொள்முதல் செய்ய வேண்டி கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| பொருட்களின் விவரம் | தூத்துக்குடி மாவட்ட துப்புரவு பொருட்கள் உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட் | தந்தை பெரியார் ஒப்பந்ததாரர் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் சேவை தொழில்துறை கூட்டுறவு சங்கம் லிமிடெட் |
|---|---|---|
| பீளிச்சிங் பவுடர் | ரூ.40.00/– | ரூ.44.00/– |
| சுண்ணாம்பு பவுடர் | ரூ.9.00/– | ரூ.18.00/– |

குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள தூத்துக்குடி மாவட்ட துப்புரவு பொருட்கள் உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவு சங்கத்தின் விலைப்புள்ளியை அனுமதித்து பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 57 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 23**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிகுட்பட்ட 19 வது வார்டு பகுதியில், மூலதனமான்ய நிதி மற்றும் இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் சுகாதரா பணியாளர்கள் குடியிருப்பு கட்டிடம் 7 பிளாக் 42 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது. விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட 65 துப்புரவு பணியாளர்களில் , 45 துப்புரவு பணியாளர்கள் பணியிள் உள்ளனர். மேற்கண்ட குடியிருப்புகளை இந்நகராட்சியில் பணிப்புரியும் நிரந்தர துப்புரவு பணியாளர்களான 45 பணியாளர்களுக்கும் விதிமுறைகளை பின்பற்றி ஒதுக்கீடு செய்தல் வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 58 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 24**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள் இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்றத் தலைவர் அவர்களின் கோரிகைகளில் பெரும்பாலன சமுதாய கழிப்பிடங்கள் பராமரிப்பின்றி பொது மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், அனைத்து சமுதாய கழிப்பிடங்களையும் பராமரிப்பு பணி மேற்கொள்ள பொறியாளர் மதிப்பீடு தயார் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 59 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 25**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் 21 வார்டு நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையான இந்நகர் பகுதியில் உள்ள சிறுசிறு வேலைகளான வாறுகால் பூசுதல், வால்வு தொட்டி மூடி மாற்றுதல், சாலைகளில் உள்ள சிறு பள்ளங்களை நிரப்புதல் போன்ற மேம்பாடு பணிகள் மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட சீர்அமைத்தல் மற்றும் மேம்பாடு செய்யும் பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சி பணி மேற்பார்வையாளர் மூலம் மதிப்பீடுகள் தயார் செய்து ,பணிகள் மேற்கொள்ளவும் , செலவினத்தை இந்நகராட்சி பொது நிதி மற்றும் குடிநீர் நிதியில் இருந்த செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 60 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 26**

சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 5990/2022/SBM நாள் 11.04.2022 ன் படி துாய்மை இந்தியா திட்டம் 2.0 ன் கீழ் நகர்ப்புறங்களில், தனிநபர் கழிப்பறை, சமுதாய கழிப்பிடம், பொது கழிப்பிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு மேற்கண்ட திட்டத்தின் கீழ்க்கண்ட விவர படி மான்யதுடன் 41 எண்ணம் தனிநபர் கழிப்பிடம் அமைக்க கீழ்க்கண்டவிவர படி மான்யதுடன் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் துாய்மை இந்திய திட்ட பரப்புரையாளர்கள் மூலம் அய்வு மேற்கொண்டு இந்நகர் பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில், கழிப்பிட வசதி இல்லாதவர்களை கண்டறிந்து 41 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, துாய்மைஇந்தியா திட்ட வளைதளத்தில் 36 விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கு

| இலக்கு | மதிப்பீடு ரூ. 30000/ ஒரு எண்ணத்திற்கு | மத்திய அரசு மான்யம் ரூ. 4000/ ஒரு எண்ணத்திற்கு | மாநில அரசு மான்யம் ரூ. 2666/ ஒரு எண்ணத்திற்கு | உள்ளாட்சி அமைப்பு மான்யம் ரூ. 2666/ ஒரு எண்ணத்திற்கு |
|---|---|---|---|---|
| 41 எண்ணம் | 12.30 இலட்சம் | 1.64 இலட்சம் | 1.09 இலட்சம் | 1.09 இலட்சம் |

**தீர்மான எண் : 61 / மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 27**

சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 27519–36/2021/ஞ2 நாள் 30.03.2022 ன்படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் நமக்கு நாமே திட்டம் 2021–22 ன் கீழ் கண்காணிப்பு கேமிரா பொருத்தும் பணி மேற்கொள்ள ரூ. 24.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்ட வழிகாட்டுதலின் படி விக்கிரமசிங்கபுரம் வர்த்தக சங்கம் மூலம் பொது மக்கள் பங்களிப்பு தொகையாக மதிப்பீட்டில் இருந்து 51 சதவிகிதம் ரூ. 12.24 இலட்சம் றெப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ. 11.76 இலட்சம் அரசு மான்யமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசாணை நிலை எண் 71 நாள் 13.09.21 ல் உள்ள வழிகாட்டுதலின் படி, 50 சதவிகிதம் பங்குத் தொகை அல்லது அதற்கு மேல் பங்குத் தொகை அளிக்கும் பங்குதாரார்கள் மூலம் பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதின் படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் கீழ்க்கண்ட விவரப்படியான பணியினை 51 சதவிகித பங்குத் தொகை அளித்துள்ள விக்கிரமசிங்கபுரம் வர்த்தக சங்கம் பதிவு எண் 2/86, ன் மூலம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கு

| வ.எண் | பணியின் பெயர் | அரசு மான்யம் | பங்களிப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பாபநாசம் மெயின்ரோட்டில் ( சிவந்திபுரம் குளம் முதல் பாபநாசம் வனசரக அலுவலக சோதனை சாவடி வரை) கண்காணிப்பு கேமரா | ரூ. 11.76 இலட்சம் | ரூ. 12.24 இலட்சம் (விக்கிரமசிங்கபுரம் வர்த்தக சங்கம் மூலம் பெறப்பட்டது) |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்தும் பணி | | |

**தீர்மான எண் : 62 / மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 28**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி 21 வார்டுகளில் உள்ள தெருகக்களில், பொது மக்கள் வாகனங்கள் செல்ல இடையூரக உள்ள மின் கம்பங்களை கண்டறிந்து, அச்சாலைகளில் உள்ள மின் கம்பங்களை பொது மக்கள் வாகனங்கள் செல்ல இடையூறுன்றி முன்னுரிமை அடிப்படையில் இடம் மாற்றம் செய்து வைக்கும் பணி மேற்கொள்ளவும், அதற்காக வரப்பெறும் மின் வாரியத்தின் கேட்புத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலுத்த அனுமதி வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் : 63 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**நகர்மன்றத் தலைவர்**
**விக்கிரமசிங்கபுரம் நகராட்சி**